டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண் ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 23.01.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 29 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 178 - Madurai | Online Edition

# இந்தியாவில் எதிர்கால தண்ணீர் தேவைக்கான நிலத்தடி நீர் மேலாண்மையை வலுப்படுத்தும் நடவடிக்கைகள்

புது தில்லி, ஜன.22

நிலத்தடி நீர் மேலாண்மை என்பது ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளின் ஒரு அங்கமாகும்.

இந்தியாவில் நிலத்தடி நீர் மட்டங்களைக் கண்காணிப்பதற்கான 43,228 நிலையங்கள், 712 நீர்வள ஆதார மையங்கள் 53,264 அடல் நீர்தர நிலைக் கண்காணிப்பு நிலையங்கள் உள்ளன. நிலத்தடி நீரை பாதுகாக்கும் வகையில், மழைநீர் சேகரிப்பு, நீர்நிலைகள் புனரமைப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு முன்முயற்சிகளை மத்திய அரசு செய்படுத்தி வருகிறது.

நாட்டின் விவசாயத்திற்குத் தேவையான நீர்பாசன வசதிகள், குடிநீர் விநியோகம் போன்ற அத்தியாவசியத் தேவைகளுக்கு ஆதார வளமாக உள்ளது. இது 62 சதவீத பாசனத் தேவைகளையும் 85 சதவீத கிராமப்புறக் குடிநீர் விநியோகத்தையும், 50 சதவீத நகர்ப்புற நீர்த் தேவையையும் பூர்த்தி செய்கிறது.

மக்கள் தொகை அதிகரிப்பு விவசாய நடவடிக்கைகளின் விரிவாக்கம், தொழில்துறை விரிவாக்கம், நகரமயமாக்கல் போன்ற நடவடிக்கைகள் நாட்டின் தண்ணீர் தேவையை அதிகரிக்கச் செய்துள்ளன. இத்தகைய சூழலில், அனைத்துத் தரப்பு நீர் தேவைகளையும் பூர்த்தி செய்யும் நோக்கில் நிலையான நிலத்தடி நீர் மேலாண்மை நடவடிக்கைகளை அமல்படுத்துவது இன்றியமையாததாகிறது. இதற்கென பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருவதுடன், ஒருங்கிணைந்த தொழில்நுட்பம் மற்றும் போதிய நிதி ஒதுக்கீடும் திட்டங்களை உரிய காலத்திற்குள் செயல்படுத்த உதவுகிறது.

# நிலக்கடலையில் உயிர் உரப்பயன்பாடு குறித்த வயல் விழா



சேலம், ஜன.22

சேலம் மாவட்டம், பெத்தநாயகன் பாளையம் வட்டம், அய்யம்பேட்டை, தும்பல் கிராமத்தில் பில் மற்றும் மெலிண்டா கேட்ஸ் நிதியுதவி திட்டத்தின் கீழ் நிலக்கடலையில் உயிர் உரப்பயன்பாடு குறித்த வயல் விழா 21.01.26 அன்று நடைப்பெற்றது.

இதில் முனைவர் சா.ரா.வெங்கடாசாலம், பேராசிரியர் மற்றும் தலைவர், மரவள்ளி மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி நிலையம், ஏத்தாப்பூர், நிகழ்ச்சியினை தலைமையேற்று சிறப்புரை வழங்கினார். மேலும் முனைவர் ப.அருட்செந்தில், பேராசிரியர் (பயிர் மரபியல்), நிலக்கடலை இரகங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். முனைவர் மு.வேல்முருகன், பேராசிரியர் (தோட்டக்கலை), நிலக்கடலையில் உயிர் உரங்கள் பயன்பாடு குறித்து எடுத்துரைத்தார்.

நிலக்கடலையில் உயிர் உரத்திடலை விவசாயிகள் பார்வையிட்டு தங்களது சந்தேகங்கள் மற்றும் கருத்துக்களை பதிவு செய்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியினை நடத்த கா.முருகன், வேளாண் மேற்பார்வையாளர், தி.ஜெயசங்கர், செ.விவேகானந்தன், உதவி வேளாண் அலுவலர்கள் ஆகியோர் ஏற்பாடு செய்தனர். இந்த பயிற்சியில் சுமார் 50-க்கு மேற்பட்ட விவசாயிகள் விவசாயிகள் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# COXBIT மற்றும் M/s. SST Microgreens உடன் மைக்ரோகிரீன்ஸ் விதை தட்டு ஆராய்ச்சிகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்



கோயம்புத்தூர், ஜன.22

M/s.SST மைக்ரோகிரீன்ஸ் நிறுவனம், சத்துச் செறிந்த வளர்ச்சி ஊடகத்தில் சமமான இடைவெளி மற்றும் ஆழத்தில் விதைகள் அமைக்கப்பட்ட விதை தட்டு ஒன்றை உருவாக்கி வருகிறது. இதன் மூலம் எளிய விதைப்பு, சீரான முளைதல் மற்றும் விதை வீணாவதை குறைப்பது சாத்தியமாகிறது. குறைந்த இடமும் வளங்களும் போதுமானதாக இருக்கும், சத்துமிக்க மைக்ரோகிரீன்ஸ் உற்பத்தியை ஊக்குவிக்கும் இந்த புதுமை, வீட்டு மற்றும் சிறிய அளவிலான உற்பத்திக்காக வழக்கமான மைக்ரோகிரீன் தட்டுகளுக்கு எளிய மற்றும் திறமையான மாற்றாக அமைகிறது.

இது தொடர்பாக, உயிரி தொழில்நுட்ப மகத்துவ மைய இயக்குனர் முனைவர் ந.செந்தில் மற்றும் M/s. SST Microgreen நிறுவனத்தைச் சேர்ந்த முனைவர் பார்வின் பானு ஆகியோர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பொறுப்பு துணைவேந்தர் மற்றும் பதிவாளர் முனைவர் கா.சுப்ரமணியன், முன்னிலையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 22.01.26ல் செய்யப்பட்டது.

இந்நிகழ்வில், விதை மைய இயக்குநரும் COXBIT இயக்குநர் குழு உறுப்பினருமான முனைவர் ஆர். உமாராணி, ஆர். ராம்குமார், முதன்மை செயல் அதிகாரி (COXBIT) கலந்து கொண்டார். இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் வீட்டு மற்றும் சிறிய அளவிலான மைக்ரோகிரீன்ஸ் உற்பத்தியை எளிதாக்குகிறது. விதை தட்டு தொழில்நுட்பம், எளிதான மற்றும் நிலைத்த உற்பத்திக்கு வழிவகுக்குகிறது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும்
# தள்ளுபடி உண்டு
# உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# இப்கோ நானோ விழிப்புணர்வு கருத்தரங்கம்

பெரம்பலூர், ஜன.22

பெரம்பலூர் மாவட்டம், கீழப்புலியூர் கிராமத்தில் நானோ உரங்கள் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இப்கோ கள அதிகாரி மக்காச்சோளத்தில் நானோ யூரியா பிளஸ், நானோ டி.ஏ.பி, நானோ ஜின்க், நானோ காப்பர், சாகரிகா திரவ உரங்களின் பயன்கள், பயன்பாட்டு முறை, மற்றும் பயிர்களில் பெறப்படும் விளைவுகள் குறித்து விரிவாக விளக்கினார். நானோ உரங்கள் பயன்படுத்துதல் மூலம் உற்பத்தி செலவு குறைதலும், மண் வளம் பாதுகாப்பதும் முக்கிய நன்மைகளாகும் என்பதை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார்.




பின்னர், இப்கோவின் சங்கட ஹறரன் பீமா யோஜனா திட்டம் குறித்து அறிமுகப் படுத்தி, நானோ உரங்களை வாங்கும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ.2 லட்சம் வரை இலவச விபத்து காப்பீடு கிடைக்கும் என்பதை அவர் தெரிவித்தார்.

மேலும், இரசாயன உரங்களின் அதிகப்படியான பயன்பாடு மண் மாசுபாடு மற்றும் மண்வள குறைவை ஏற்படுத்தும் என்பதை வலியுறுத்தி, மாற்றாக நானோ உரங்கள் ஒரு சிறந்த தீர்வாக இருக்கும் என்றும் கூறினார். துல்லியமான முறையில் நானோ உரங்களை தெளிப்பதற்கு இப்கோ கிசான் ட்ரோன் சேவையைப் பயன்படுத்தலாம் என்றும், நானோ உரங்களுடன் பூச்சிக்கொல்லி மருந்துகளையும் சேர்த்து தெளிப்பதன் மூலம் இடுபொருள் செலவுகளை குறைக்கலாம் என்றும் அறிவுறுத் தினார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

**அன்புடையீர்,**

நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ் கடந்த 13 ஆண்டுகளாக மின் நாளிதழ் வடிவில் லட்சக்கணக்கான விவசாயிகள், வேளாண் துறை மாணவர்கள் ஆகியோருக்குத் தேவையான தகவல்களை செய்தி வடிவிலும், கட்டுரை வடிவிலும் வழங்கி வருகிறது. இதனால் பலனடைந்தோர் ஏராளம்.

வேளாண் துறை அதிகாரிகள், வேளாண் துறை வல்லுநர்கள், வேளாண் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், மத்திய, மாநில அரசுத் துறை அதிகாரிகள் ஆகியோர் விவசாயிகள், மாணவர்கள் பயனடையும் வகையில், பல்வேறு தகவல்களை செய்தி வடிவிலும் கட்டுரை வடிவிலும் அளித்து வருகின்றனர்.

இத் தருணத்தில், நமது 'அக்ரி டாக்டர்' மின்னிதழ், நூல் வடிவில் ஆண்டு மலரை வெளியிட முடிவு செய்துள்ளது. இந்த மலர் விரைவில் வெளியாகவிருக்கிறது. இந்த ஆண்டு மலரில் விவசாயம் தொடர்பான ஏராளமான கட்டுரைகள், விவசாயிகளின் அனுபவங்கள், வெற்றிக் கதைகள், சந்தித்த பிரச்சினைகள் உள்ளிட்டவை இடம்பெறவுள்ளன.





இந்த ஆண்டு மலர் வேளாண் துறை சார்ந்த மாணவர்களுக்கு பெரிதும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. எனவே, இந்த ஆண்டு மலரை வாங்கி பயனடையுமாறு மாணவர்களுக்குப் பரிந்துரை செய்யும்படி தங்களை பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், இந்த மலர் ஆயிரக்கணக்கான விவசாயிகளைச் சென்றடையவுள்ளதால், தங்களது கல்லூரி / நிறுவனங்கள் தொடர்பான விளம்பரங்களை இந்த மலரில் அளித்து உதவும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள்
உண்மையுள்ள

ஆசிரியர் & வெளியீட்டாளர்
எம்.ஜெ.வாசுதேவன்

தொடர்புக்கு
+91 80563 05483
+91 9344811812

**நன்றி**

# கால்நடைகளை அடையாளம் காணல் பற்றி எடுத்துரைத்த வேளாண்மை கல்லூரி மாணவர்கள்



திருச்சி, ஜன.22

திருச்சிராப்பள்ளி, சமயபுரத்தில் உள்ள தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக்கழகத்தில் வேளாண் அறிவியல் பயிலும் இறுதி ஆண்டு மாணவர்கள் (B3 திருவெறும்பூர்). தங்கள் ஊரக வேளாண்மைப் பணி அனுபவத்தில், துவாக்குடியில் விலங்கு (கால்நடை) அடையாளம் காணல் பற்றி கால்நடை வளர்ப்பவர்களுக்கு எடுத்துரைத்தனர். மேலும் இதன் பயன்களைப் பற்றியும் எந்தெந்த முறையில் இதனை பின்பற்றலாம் என்பதையும் விளக்கினர். இதற்கு அங்குள்ள கால்நடை வளர்ப்பவர் தங்கள் ஆதரவைத் தெரிவித்து அதனை அவர்கள் உபயோகப்படுத்த போவதாகவும் கூறினர்.

## பொதுவான முறைகள்

**காது குறிச்சொற்கள் :** எண்கள் அல்லது குறியீடுகளைக் கொண்ட பிளாஸ்டிக் அல்லது உலோகக் குறிச்சொற்கள், கால்நடைகளுக்கு பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**மைக்ரோசிப்கள் :** நிரந்தர அடையாளத்திற்காக தோலின் கீழ் பொருத்தப்படும் சிறிய சில்லுகள், பெரும்பாலும் செல்லப் பிராணிகள் மற்றும் காட்சி விலங்குகளில் பயன்படுத்தப் படுகின்றன.

**RFID குறிச்சொற்கள் :** தொலைதூரத்திலிருந்து படிக்கக்கூடிய ரேடியோ–அதிர்வெண் அடையாளக் குறிச்சொற்கள், பெரிய மந்தைகளுக்கு திறமையானவை.

**பிராண்டிங் :** நிரந்தர அடையாளத்துடன் கூடிய சூடான அல்லது உறைபனி பிராண்டிங், கால்நடைகளுக்கான ஒரு பண்டைய நுட்பமாகும்.

**காதில் வெட்டுக்கள் :** காதின் உள்ளே நிரந்தர அடையாளங்கள்.

**காட்சி அடையாளங்கள் :** ரோம வடிவங்கள், நிறம் அல்லது தனித்துவமான அடையாளங்கள் (எ.கா. வரிக்குதிரை கோடுகள்) போன்ற இயற்கை அம்சங்கள்.

**டிஜிட்டல்/AI :** புகைப்படங்கள் அல்லது வீடியோவிலிருந்து விலங்குகளை அடையாளம் காண கணினி பார்வையைப் பயன்படுத்துதல், தனித்துவமான வடிவங்கள் அல்லது அம்சங்களை பகுப்பாய்வு செய்தல்.




# அரசு சாரா அமைப்பை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்




திருச்சி, ஜன.22

திருச்சி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டாரம், நாளந்தா வேளாண்மை கல்லூரியின் மாணவர்கள் அ.ஆதித் கித்தேலின் பார்க்கர், ச.ஹரிஷ் குமார், ம.மது மாறன், த.மனோஜ், மு.முகமது பாசில், ம.மௌனிஷ், ப.பிரவீன் குமார், மு.ராஜகுரு ஆகியோர் அரசு சாரா அமைப்பை பார்வையிட்டனர்.

ஜம்புனாதபுரத்தில் செயல்பட்டு வரும் நவீன்ஸ் கார்டன் என்ற அரசு சாரா அமைப்பை (NGO) பார்வையிட்ட மாணவர்கள். அந்த அமைப்பின் தலைவர் டாக்டர் கே.நவின் கிருஷ்ணன், நிறுவனர் டி.கிருஷ்ணன் ஆகியோரிடம் கலந்துரையாடினர். இந்த NGO 2011இல் நிறுவப்பட்டது.

இதுவரை 922 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்தி, தற்போது 2300க்கும் மேற்ப்பட்ட உறுப்பினர்களுடன் சமூக சேவையில் ஈடு பட்டு வருகிறது. முக்கிய செயல்பாடுகளாக உலர் நில மேம்பாட்டு திட்டம், மழை சார்ந்த விவசாய நிலங்களை சீரமைத்து விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் முயற்சி களை செய்து வருகிறது. தமிழ்நாட்டில் முதல்முறையாக வேளாண் சுற்றுலா கருத்தை அறிமுகப்படுத்திய பெருமை

இந்த அமைப்பையே சேரும். இந்த அமைப்பின் முக்கிய செயல்பாடுகளாக சுற்றுச்சூழல் பாதுகாப்பு, வனவிலங்கு பாதுகாப்பு, கல்வி மற்றும் சமூக நலன் ஆகியவற்றில் முக்கிய கவனம் செலுத்துகின்றனர்.

# வசந்தம் அக்ரிடெக்

VASANTHAM Agri Tech

தலைமை அலுவலகம்: 129/1ஏ2, வண்டியூர் ரிங் ரோடு, சங்கு நகர், மதுரை, தமிழ்நாடு-625020.

**கிளைகள்:-மதுரை,சிவகங்கை,திருநெல்வேலி**

## 1 பவர் வீடர் = 40 வேலை ஆட்கள்

## இப்போது அரசு மானியத்தில்

- 40% - பெரிய விவசாயி
- 50% - பெண்கள் / SC/ST
- 60% - சிறுகுறு விவசாயி
- 70% - சிறுகுறு விவசாயி & SC/ST



Sarathi i06

**மானியத்திற்கு விண்ணப்பிக்க தேவையான ஆவணங்கள்**

- ஆதார்
- புகைப்படம்
- பட்டா
- அடங்கல்
- சாதிச் சான்றிதழ் (தகுதி இருந்தால்)
- சிறுகுறு விவசாயி சான்றிதழ்



Yield max VT 260

**உடனடி மானியம் உள்ள மாவட்டங்கள்**

- மதுரை
- சிவகங்கை
- விருதுநகர்
- ராம்நாடு



Sirachi 8D6

1,22,344 மதிப்புள்ள 9 HP டீசல் பவர் வீடர்,SC மற்றும் சிறு விவசாயிக்கு 36,703 மட்டுமே

இப்போதே விண்ணப்பியுங்கள் +91 75400 66652

# ஒளிப்பொறி மற்றும் மஞ்சள் ஒட்டும் பொறியைப் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளித்த வேளாண் கல்லூரி மாணவிகள்



திருச்சி, ஜன.22

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் ஹரிநந்தனா, பெனாசீர், ரிசா, சாருமதி, செரின் செண்பகம், சிவப்பிரியா, சினேகவள்ளி, சுகந்தி, சுஜா வர்ஷினி, சுவேதா, சுரேகா, வர்சா, வசந்த ஸ்ரீ, யாஷிகா, யோகவர்ஷினி, யுவ ஸ்ரீ.தி, யுவஸ்ரீ.ந ஆகியோர் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் கிராமங்களில் தங்கி உழவர் பெருமக்களின் வாழ்வாதாரம் மற்றும் அவர்களுடைய சாகுபடி அனுபவ முறைகள் பற்றி அறிந்து வருகின்றனர்.

அதன் ஒரு பகுதியாக திருச்சி மாவட்டம், லால்குடியில் உள்ள நகர் கிராமத்தில் வேளாண் மாணவிகள் ஒளிப்பொறி மற்றும் மஞ்சள் ஒட்டும் பொறியைப் பற்றி விவசாயிகளுக்கு விளக்கினர். இந்த இரண்டு பொறிகளும் நெல் வயலில் உள்ள பூச்சிகளை கட்டுப்படுத்த பயன்படுத்தப்படுகிறது.

இதில் விளக்குப்பொறி மற்றும் மஞ்சள் ஒட்டும் பொறியால் கட்டுப்படுத்தப்படும் பூச்சிகள், செயல்படும் விதம், அமைக்கும் முறை மற்றும் பயன்கள் குறித்து மாணவிகள் விவசாயிகளுக்கு விவரித்து கூறினார்.

மேலும் இரசாயனப் பொருட்கள் எதுவும் பயன்படுத்தப் படாததால் சுற்றுச்சூழலுக்கு எந்த பாதிப்பும் ஏற்படுத்தாது என்றும் இந்த பொறிகள் சாறு உறிஞ்சும் பூச்சிகள், அந்துப்பூச்சி, அசுவினி பூச்சி போன்ற பூச்சிகளை கட்டுப்படுத்துவதாகவும் தெரிவித்தனர்.



Rithvik Pipe
25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன்
கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்
பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்
25 ஆண்டுகள் உத்தரவாதம்
நம்பிக்கைக்கு அடையாளம்
100% LEAD-FREE பைப்புகள்
ஆரோக்கியமான தண்ணீர்,
ஆரோக்கியமான வாழ்க்கை
ISI சான்று பெற்ற பைப்புகள்
தரத்திற்க்கு ஒரே அடையாளம்
ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும்
நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
67 GRADE மூலப்பொருட்கள்
அதிக வலிமை, நீண்ட ஆயுள்
TEST CERTIFICATE – QR CODE மூலமாக
ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக
பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
FREE ON-SITE TESTING
விற்பனைக்கு பின் தரம் உங்கள்
கண்முன்னே
சரியான எடை, தடிமன்
ஏமாற்றமில்லா தயாரிப்பு
PRODUCT RANGES
ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes)
ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80)
ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy)
ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG)
ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm
PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK
RITHVIK PIPES PROUDLY TRUSTED BY
Office
Rithvik Pipe Company, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com
Factory
Rithvik Pipe Company, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com
For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# மல்லிகையில் பூச்சி/நோய் மேலாண்மை - ஒரு பார்வை



தை பிறந்தால் மல்லிகை மலரும் என்பார்கள், இன்று மல்லிகை பூக்களின் விலை ஒரு கிராம் தங்கம் விலைக்கு நிகர (13680) சந்தைகளில் விற்பனை செய்யப்படுகிறது. பூக்களின் ராஜா ரோஜாவாக இருந்தாலும், மல்லிகை மன்னர்களை மயக்கும் ராணியாக உள்ளது என்பது மிகையல்ல. அப்படிபட்ட மல்லிகையில் பல்வேறு வகையான பூச்சி/ நோய் தாக்குதலால் அதிகமாக பாதிக்கிறது. பொதுவாக மல்லிகை செடி புதர் போன்று வளரும் தன்மை உடையது வருடத்திற்கு ஒரு முறை நவம்பர் இறுதி வாரம் அல்லது டிசம்பர் முதல் வாரத்தில் கவாத்து செய்ய வேண்டும்.

தரையிலிருந்து 50 செ.மீ உயரத்திலிருந்து மல்லிகை செடியை வெட்டி எடுத்து கவாத்து செய்ய வேண்டும். கவாத்து செய்த பின் 5% வேப்பங் கொட்டை கரைசலை தெளிக்க வேண்டும். அப்படிபட்ட மல்லிகையில் பூச்சி/ நோய் மேலாண்மை குறித்து இந்த பதிவில் விரிவாக பார்ப்போம்.

**1) மொட்டு புழு**

இவை பூக்களின் இளம் மொட்டுகளை தாக்கி அழிக்கும். மொட்டுகள் காய்ந்து உதிர்ந்து போகும். இந்த புழுவை கட்டுப்படுத்த மானோ குரோட்டோ பாஸ் 2 மி.லி/1 லிட்டர் என்ற அளவில் கலந்து தெளிக்க வேண்டும்.

**2) சிலந்தி**

இவை இலைகளை பின்னி பிணைந்து கடித்து சேதப் படுத்தும். அவற்றைத்தடுக்க நனையும் கந்தகம் 0.2% என்ற அளவில் தெளிக்கலாம்.

**3) நூற்புழுக்கள்**

மண் மாதிரி எடுத்து நூற்புழு தாக்குதலைக் கண்காணிக்க வேண்டும். தாக்கப்பட்ட செடிகளின் இலைகளின் வெளிறிய மஞ்சள் நிறமாக மாறி பின்னர் கருகி விடும். இதனை கட்டுப்படுத்த 10 கிராம் டெமிக் குருணை மருந்தினை வேர் பாகத்தில் இட்டு நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

**4) வேர் அழுகல் நோய்**

களிமண் போன்ற ஈர வகை மண்ணில் குண்டு மல்லிகை பயிரிட்டால் வேர் அழுகல் ஏற்பட்டு செடி வாடி காய்ந்து மடியும். இதனை கட்டுப்படுத்த காப்பர் ஆக்ஸி குளோரைடு 0.25% கரைசலை செடியின் வேர்பாகத்தில் நன்றாக நனைக்க வேண்டும். நல்ல வடிகால் வசதியை ஏற்படுத்திட வேண்டும்.

**5) இலைகள் மஞ்சள் நிறமாக மாறுதல்**

இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவதை தடுக்க லிட்டருக்கு 5 கிராம் பெரஸ் சல்பேட் கலந்து தெளிக்க வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# மண் மாதிரிகள் சேகரிக்கும் முறை

விருதுநகர், ஜன.22

விருதுநகர் மாவட்டம்,காரியாபட்டி தொகுதி, புல்லூர் கிராமத்தில் மண் மாதிரிகள் சேகரிக்கும் முறை குறித்து மதுரை வேளாண் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம் அளித்தனர்.

**மண் மாதிரிகள் எடுப்பதற்கு முன்பு கவனிக்க வேண்டிய குறிப்புகள்**

மண் மாதிரி எடுக்கும் பகுதி முழுவதையும் குறுக்கும் நெடுக்கு மாக நடந்து, அப்பகுதியில் காணப்படும் நிலச்சரிவு, நிறம், நயம் மேலாண்மை முறை, பயிர் சுழற்சி இவற்றிற்கு ஏற்றாற்போல பல பகுதிகளாகப் பிரித்து, தனித் தனியாக மண் மாதிரிகள் சேகரிக்க வேண்டும். வரப்பு, வாய்க்கால்கள், மரத்தடி நிழல் பகுதிகள் மற்றும் கிணற்றுக்கு அருகிலும் மக்கு, குப்பை உரங்கள், பூஞ்சான மற்றும் பூச்சி மருந்து இடப்பட்ட பகுதிகளில் மண் மாதிரி எடுக்கக் கூடாது.

### மண் மாதிரிகள் சேகரிக்க வேண்டிய காலம்




- நிலம் தரிசாக இருக்கும் காலத்தில் மண் மாதிரிகள் எடுக்க வேண்டும்.
- உரமிட்டவுடன் சேகரிக்கக் கூடாது. குறைந்தது 3 மாத இடைவெளி தேவை.
- பயிர்கள் உள்ள நிலங்களில் மண் மாதிரிகள் எடுக்கக்கூடாது.

### மண் மாதிரிகள் சேகரிக்கும் முறை

மண் மாதிரிகள் எடுக்க வேண்டிய இடத்திலுள்ள இலை, சருகு, புல், செடி ஆகியவற்றை கையினால் மேல் மண்ணை நீக்காமல் அப்புறப்படுத்த வேண்டும். மாதிரி எடுக்கும் பொழுது ஆங்கில எழுத்து 'V' போல் மண்வெட்டியால் இருபுறமும் வெட்டி அந்த மண்ணை நீக்கி விட வேண்டும். பிறகு நிலத்தின் மேல்மட்ட பகுதியிலிருந்து கொழு ஆழம் வரை (0-15 செ.மீ. அல்லது 0-23 செ.மீ.) ஒரு இஞ்சு (அ) 2.5 செ.மீ. பருமனில் மாதிரி சேகரிக்க வேண்டும்.

இவ்வாறாக குறைந்த பட்சம் ஒரு எக்டரில் 10 முதல் 20 இடங்களில் மாதிரிகள் சேகரிக்க வேண்டும். மண் மாதிரிகள் ஈரமாக இருந்தால் முதலில் அதனை நிழலில் உலர்த்த வேண்டும். வாளியில் சேகரித்த மண் மாதிரியை சுத்தமான சாக்கு அல்லது பாலித்தீன் தாள் மீது பரப்பி, அதனை நான்காகப் பிரித்து, எதிர் முனைகளில் காணப்படும் இரண்டு பகுதிகளை கழித்து விட வேண்டும். தேவைப்படும் 12 கிலோ அளவு வரை இம்முறையினை திரும்பத் திரும்ப கையாள வேண்டும்.

சேகரித்த மண் மாதிரியை சுத்தமான ஒரு துணிப்பை / பாலித்தீன் பையில் போட்டு அதன் மீது மாதிரியைப் பற்றிய விவரங்களைக் குறிப்பிட வேண்டும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட மண் மாதிரியை மண் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்புவார்கள்.

### மண் பரிசோதனையின் பயன்பாடுகள்

1. மண்ணின் ஊட்டச்சத்து நிலையை அறிதல்
2. சரியான உர அளவை நிர்ணயித்தல்
3. மண்ணின் PH (கார-அமிலநிலை) மதிப்பை கண்டறிதல்
4. மண் வளத்தை பாதுகாத்தல்
5. பயிர் உற்பத்தியை அதிகரித்தல்

# வருடாந்திர விதை திருவிழா மற்றும் ஊட்டச்சத்து காய்கறி தோட்ட கண்காட்சி

சேலம், ஜன.22

சேலம் மாவட்டம், சந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் வருடாந்திர விதை திருவிழா மற்றும் ஊட்டச்சத்து காய்கறி தோட்டம் அமைத்தல் நிகழ்ச்சி 21.06.26 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் முனைவர் இரா.உமாராணி, இயக்குநர் விதை மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்




கழகம், கோயம்புத்தூர், துவக்கி வைத்து விழா பேரூரை ஆற்றினார்.



இந்நிகழ்ச்சியில் முனைவர் ர.விஜயன், திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூர், வரவேற்புரை நிகழ்த்தினார். முனைவர் இரா.ஜெகதாம்பாள், பேராசிரியர், விதை உற்பத்தி தொழில்நுட்பங்கள், பற்றி விவசாய பெருமக்களுக்கு விளக்கம் அளித்தார். முனைவர் மு.கதிரவன், இணை பேராசிரியர், விதை தொழில்நுட்பவியல், விதை வணிகம் பற்றி விவசாய பெருமக்களுக்கு விளக்கம் அளித்தார். முனைவர் கா.ராஜா, பேராசிரியர், விதை நேர்த்தி மற்றும் விதை நேர்த்தி பற்றிய செயல் விளக்கம் விவசாயிகளுக்கு செய்து காண்பித்தார். முனைவர் ம.இரவி, கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி நல்கினார்.

இந்நிகழ்ச்சியில் பாரம்பரிய பல்வேறு பயிர்களின் பாரம்பரிய இரகங்கள், விதை, காய்கறி நாற்றுகள் பல்வேறு பாரம்பரிய காய்கறி பயிர்களின், பெயர்களின் விதைகள் மற்றும் கிழங்குகள் விவசாயிகளின் பாரம்பரிய, நெல் இரகங்கள் காட்சிப் படுத்தப்பட்டன. மேலும் இயற்கை விவசாயம் மற்றும் அங்கக வேளாண்மையில் உபயோகப்படுத்தப்படும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகளான பேசிலஸ் சப்டிலஸ், பாஸ்போ பாக்டீரியா, பஞ்சகாவ்யா, மீன் அமிலம் போன்ற இடுபொருட் களும் காட்சிப்படுத்தப்பட்டன. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தை சார்ந்த உறுப்பு கல்லூரிகளின் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை மாணவர்கள் கலந்து கொண்டு பல்வேறு செயல் விளக்கங்களை செய்து காண்பித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள், கல்லூரி மாணவர்கள் பண்ணை மகளிர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# விவசாயிகளுக்கான இரண்டு நாள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி முகாம்



திருப்பூர், ஜன.22

மத்திய வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சகத்தின் ஆய்வு அறிக்கையின் படி தமிழகத்தில் குறிப்பாக கோவை, திருப்பூர், கிருஷ்ணகிரி போன்ற மாவட்டங்களில் விளையும் காய்கறி மற்றும் பழங்களில் அதிகப்படியான பூச்சி/பூஞ்சானக்கொல்லிகள் எஞ்சிய நஞ்சு மற்றும் பரிந்துரைக் கூடாத பூச்சிக்கொல்லிகள் அதிகளவில் பயன்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையம், திருச்சி மற்றும் தோட்டக்கலைத்துறை, சார்பில் திருப்பூர் மாவட்டம், வெள்ளக் கோவில் வட்டாரத்திலுள்ள பெருமாள்புதூர் பகுதி விவசாயிகளுக் காக இரண்டு நாள் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சி முகாம் 21.01.26 & 22.01.26ஆம் தேதிகளில் நடைபெற்றது.

இப்பயிற்சி முகாமில், மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் துணை இயக்குனர் முனைவர் ச.சிவராம கிருஷ்ணன், இரண்டு நாள் பயிற்சியை பற்றிய தொடக்க உரையாற்றினார், மேலும், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பற்றிய வழிமுறைகளை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். அதனை தொடர்ந்து வெள்ள கோவில் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் சதிஷ் குமார்.K.S, இப்பயிற்சியில் கலந்து கொண்டு இப்பயிற்சியை பற்றிய சிறப்புரையாற்றினார். மேலும், மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் முனைவர் இரா.கோவிந்தராஜ், தென்னை மற்றும் காய்கறி பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி/நோய் மேலாண்மை பற்றி விளக்க உரையாற்றினார். இப்பயிற்சியில் மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் எம்.அமுதா, விவசாயிகளுக்கு விதை நேர்த்தியின் முக்கியத்துவம் மற்றும் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பில் பல்வேறு பொறிகளின் பயன்பாடு, வயல் சூழல் ஆய்வின் முக்கியத்துவம், நன்மை மற்றும் தீமை செய்யும் பூச்சிகளை இனம் கண்டறிதல் பற்றி விரிவாக செயல் விளக்கம் அளித்தார். மேலும் உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் முனைவர் இரா.ராஜேஸ்வரி, உயிரியல் முறையில்

பூச்சிகள் மற்றும் நோய்களை கட்டுப்படுத்தும் முறைகள் பற்றி விரிவாக விளக்கம் அளித்தார். இம்மையத்தின் பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப உதவியாளர் அபின், இரசாயண பூச்சிக் கொல்லிகளால் ஏற்படும் பாதிப்புகள் மற்றும் பாதுகாப்பான முறையில் இரசாயண பூச்சிக்கொல்லிகளை பயன்படுத்துவது பற்றி செயல் முறை விளக்கம் அளித்தார்.

மேலும், மத்திய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு மையத்தின் பயிர் பாதுகாப்பு அலுவலர் முனைவர் இரா.கோவிந்தராஜ், தென்னையில் வயல் சூழல் ஆய்வு பற்றிய செயல்விளக்கம் அளித்தார். இம்மையத்தின் உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் நிசிந்தா.N, தாவரம் மற்றும் வேம்பு சார்ந்த பூச்சி விரட்டிகள் தயாரிக்கும் முறைகளை பற்றி செயல் விளக்கம் அளித்தார். இப்பயிற்சியின் முடிவில் உதவி பயிர் பாதுகாப்பு அலுவலர் ரெஷ்மி.K.M, நன்றியுரை ஆற்றினார். இப்பயிற்சியில் வெள்ளக் கோவில் வட்டாரத்தை சேர்ந்த 53 விவசாயிகள் பங்கு பெற்று பயனடைந்தனர்.


இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தோட்டக்கலை அலுவலர்கள் K.தீணா மற்றும் அனுசபர்மதி செய்திருந்தனர்.

## தென்னை டானிக் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



ஈரோடு, ஜன.22

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தை சேர்ந்த இறுதி ஆண்டு பயிலும் மாணவர்கள், ஊரக வேளாண் பணி அனுபவப் பயிற்சியின் கீழ் பவானி சாகர் பேரூராட்சியில் தங்கி களப்பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தென்னையின் மகசூலை 20 சதவீதம் வரை உயர்த்தும் தென்னை டானிக் பற்றி கொத்தமங்கலம் பகுதியை சேர்ந்த 15க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இலைகளில் பச்சையத்தை அதிகரித்து, ஒளிச்சேர்க்கையைத் தூண்டி, குரும்பைகள் உதிர்வதைக் குறைத்து, காய்களின் எண்ணிக் கையையும், அளவையும் அதிகரித்து, மேலும் பூச்சி, நோய் எதிர்ப்பு சக்தியையும் தருகிறது. இது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தால் உருவாக்கப்பட்ட ஒரு ஊட்டச்சத்து கரைசல் ஆகும். இதை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை வேர் மூலம் கொடுக்க வேண்டும் (ஒரு மரத்திற்கு 200 மி. லி) என இம்மாணவர்கள் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# 14வது அறிவியல் ஆலோசனை குழு கூட்டம் நடைபெற்றது




விருதுநகர், ஜன.22

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 14வது அறிவியல் ஆலோசனைக் குழு கூட்டம் நடைபெற்றது.

இவ்வாலோசனை கூட்டத்தில் முனைவர் இராமசுப்ரமணியன், திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், அருப்புகோட்டை வரவேற்புரை வழங்கினார், பின்னர் 13வது ஆலோசனை கூட்டத்தில் வழங்கிய பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிவியல் ஆலோசனைக் குழு உறுப்பினர்களுக்கு எடுத்துரைத்தார்.

அறிவியல் ஆலோசனை கூட்ட உறுப்பினர்கள் தங்களை அறிமுகம் செய்து கொண்டு வருகிற 2026-2027 வருடத்தில் மேற்கொள்ள வேண்டிய பரிந்துரைகளை வழங்கினார்கள். முனைவர் முருகன் விரிவாக்க கல்வி இயக்குனர், தலைமை தாங்கினார், தலைமையுரையில் அறிவியல் ஆலோசனைக் கூட்டத்தின் முக்கியத்துவத்தையும் மற்றும் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் செயல்பாடுகள் குறித்தும் விளக் மளித்தார்.

விவசாயிகளை விதை உற்பத்தியாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களாக மாற்றும் பல்வேறு பயிற்சிகள் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

முனைவர் பாஸ்கரன், முதன்மை விஞ்ஞானி, வேளாண்மை தொழில்நுட்பப் பயன்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் (10 வது மண்டலம்), ஹைதராபாத் வயல்வெளி ஆய்வுகள் மற்றும் முன்னிலை செயல்விளக்கத் திடல்கள் மூலம் மானாவாரி சாகுபடிக்கு ஏற்ற புதிய இரகங்களை விவசாயிகளிடையே பிரபலப் படுத்தப்பட வேண்டும் என பரிந்துரை வழங்கினார். முனைவர் காஞ்சனா முதல்வர், சமுதாய அறிவியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை மகளிர்களுக்கு சிறுதானியங்களில்

மதிப்பு கூட்டுதல் பயிற்சிகள் வழங்க வேண்டும், விவசாயத்தில் வேலைப் பளுவை குறைக்கும் கருவிகளை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டும் என கூறினார்.

செல்விரமேஷ், பேராசிரியர் (உழவியல்), வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை காலநிலை மாற்றத்திற்கேற்ற சாகுபடி தொழில்நுட்பங்களை பிரபல படுத்த வேண்டும் என ஆலோசனை வழங்கினார். முனைவர் ஜோதிமணி, பேராசிரியர் மற்றும் தலைவர், பருத்தி ஆராய்ச்சி நிலையம், பருத்தி எஸ்.வி. பி.ஆர் 7 இரகத்தினை பிரபலப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார். வேளாண்மை துணை இயக்குனர் நாச்சியார் அம்மாள், பயறு வகை மற்றும் எண்ணெய் வித்து பயிர்களில் புதிய இரகங்களை பிரபலப்படுத்த வேண்டும், பூச்சி மற்றும் களைக் கொல்லிகளை சரியான அளவில் பயன்படுத்துவது குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என எடுத்துரைத்தார்.

சிவகுமார், தாதம்பட்டி புதிய முயற்சியாக பாரம்பரிய அரிசிகளில் மதிப்பு கூட்டி 10 புதிய பொருட்களையும் மற்றும் அருப்புக்கோட்டை வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பயிற்சி பெற்ற உமாதேவி முருங்கையில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை முனைவர் முருகன், விரிவாக்க கல்வி இயக்குநர், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் அறிமுகப்படுத்தினார்.

இவ் ஆலோசனை கூட்டத்தில் சிறுதானியங்கள் மற்றும் பனைமரம் குறித்த தொழில்நுட்ப கையேடுகள் வெளியிடப்பட்டது. மேலும் புதிய ரகங்கள், விதை நேர்த்தி தொழில்நுட்பங்கள், விருதுநகர் மாவட்டதில் புவிசார் குறியீடு பெற்ற சம்பா வத்தல், சாத்தூர் வெள்ளரிக்காய், மொச்சை, அதலைகாய், வறண்ட நிலப்பழ பயிர்கள், புதிதாக இந்த வருடம் மண்டல ஆராய்ச்சி நிலையம் அருப்புக்கோட்டையில் இருந்து வெளியிடப்பட இருக்கும் சீதாப்பழம் எ.பி.கே 2 புதிய இரகம் மற்றும் மதிப்புகூட்டப்பட்ட உணவு பொருட்கள் கண்காட்சியில் காட்சிபடுத்தப்பட்டன. விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த பல்வேறு துறை அதிகாரிகள் மற்றும் விவசாய உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். இவ் ஆலோசனை கூட்டத்தில் செல்விரமேஷ், பேராசிரியர் (உழவியல்), வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை நன்றியுரை வழங்கினார்.



# நீமாஸ்திரா செய்முறை விளக்கமளித்த வேளாண்மை கல்லூரி மாணவிகள்

நாமக்கல், ஜன.22

நாமக்கல் மாவட்டம், மோகனூர் வட்டம், மணப்பள்ளி கிராமத்தில் பி.ஜி.பி. வேளாண் அறிவியல் கல்லூரி மாணவிகள் நீமாஸ்திரா தயாரிப்பு மற்றும் பயன்பாடு குறித்த காட்சி விளக்கத்தை நடத்தினார்.



வேம்பின் சக்தியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப் படும் இயற்கை பூச்சி தடுப்பு திரவமான நீமாஸ்திரா, இலைத் துளை பூச்சி, சுருள் பூச்சி, வெள்ளை ஈ உள்ளிட்ட பூச்சிகளை கட்டுப்படுத்துவதில் எவ்வாறு செயல்படுகிறது என்பதை மாணவிகள் அறிவியல் அடிப்படையுடன் விவரித்தனர்.

இந்த காட்சி விளக்கத்தின் முக்கிய நோக்கம், பாரம்பரிய இயற்கை வேளாண் முறைகளில் முக்கிய பங்காற்றும் நீமாஸ்திராவின் தயாரிப்பு முறை, அதன் பயன்கள் மற்றும் விளைச்சல் பாதுகாப்பில் அதன் செயல்திறன் குறித்து விவசாயிகளுக்கு நேரடி அறிவை வழங்குவதாகவும். இதன் ஒரு பகுதியாக, விவசாயிகளின் முன்னிலையில் நீமாஸ்திரா தயாரிக்கும் முறையை செய்து காட்டினார்கள். அதில் வேப்பெண்ணெய் அல்லது வேப்பிலை, தண்ணீர், மாட்டுக் கோமியம், மாட்டுச் சாணம் ஆகியவற்றை சீரான அளவில் கலந்து 24 மணி நேரம் நன்றாக ஊறவைத்து பயன்படுத்த வேண்டும்.

தயாரிக்கப்பட்ட நீமாஸ்திராவை பயிர்களில் நேரடியாகத் தெளிப்பது அல்லது துளி தெளிப்பான் மூலம் பயன்படுத்துவது குறித்தும் மாணவிகள் விளக்கினர். மேலும், நீமாஸ்திரா பூச்சிகளின் உணவு உண்ணும் திறனைத் தடுத்து முட்டையிடும் திறனை குறைக்கிறது, தாவரங்களில் பாதுகாப்பு சுவரை உருவாக்குகிறது என்பதான அறிவியல் காரணங்களையும் எடுத்துரைத்தனர். இந்த காட்சி விளக்கத்தின் மூலம் மணப்பள்ளி கிராம விவசாயிகளுக்கு நீமாஸ்திரா பற்றிய நன்மைகளை எடுத்துரைத்தனர்.

# இறவை நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு ஓர் வேண்டுகோள்!

சேலம், ஜன.22

கார்த்திகைப் பட்ட இறவை நிலக்கடலை சாகுபடி செய்துள்ள சேலம் மாவட்ட விவசாய பெருமக்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள். நிலக்கடலை பயிர் பூக்கும் தருணத்தில் (விதைப்பு செய்த 45வது நாள்) ஜிப்சம் இடுவதன் மூலம் அதிக



மகசூல் பெறலாம். ஒரு ஏக்கருக்கு 160 கிலோ ஜிப்சம் வீதம் போட வேண்டும். அதில் 80 கிலோ ஜிப்சத்தை அடியுரமாக விதைப்பதற்கு முன் இடவேண்டும். மீதமுள்ள 80 கிலோ ஜிப்சத்தை விதைத்த 45வது நாளில் (பூக்கும் பருவம்) இரண்டாவது களையெடுக்கும் போது மேலுரமாக இட்டு செடியினை சுற்றிலும் நிலக்கடலை பயிரின் வேர்ப்பகுதி மற்றும் காய் உருவாகும் பகுதியின் அருகில் ஜிப்சத்தினை சேர்த்து செடியினை சுற்றி நன்கு மண் அணைக்க வேண்டும்.

**ஜிப்சம் இடுவதன் பயன்கள்**

- ஜிப்சம் இடுவதால் மண்ணின் இறுக்கம் குறைந்து மண் இலகுவாக மாறும்.

- செடியில் பூக்கும் பூக்கள் அனைத்துமே விழுதுகளாக இறங்கி அதிக எண்ணிக்கையில் காய்கள் பெற உதவுகிறது.

- பிஞ்சி மற்றும் பொக்குக் காய்கள் இல்லாமலும் காய்களின் பருமன் ஒரே சீராகவும், திறட்சியாகவும் உருவாகி பயிரின் மகசூல் அதிகரிக்கும்.

- மண்ணில் ஈரப்பதத்தினை தேக்கி வைத்து நிலக்கடலை பயிரினை நீண்ட நாட்களுக்கு மலர்ச்சியாக வைத்திருக்கவும் ஜிப்சம் உதவுகிறது.

- ஜிப்சத்தில் உள்ள 23% சுண்ணாம்பு சத்து காய்கள் திரட்சியாக உருவாகவும், 18% கந்தக சத்து நிலக்கடலை பருப்பில் எண்ணெய் அளவு அதிகரிக்கவும் மண்ணில் உள்ள தழைச் சத்தினை நிலக்கடலை பயிர் எடுத்துக் கொள்ளவதற்கான திறனையும் அதிகரிக்க செய்கிறது.

இதன் மூலம் பெறப்படும் விதையானது தரமானதாகவும் பொக்குக்காய்கள் இல்லாமலும் அதிக முளைப்புத்திறன் கொண்டதாக இருக்கும் என சேலம் விதைப்பரிசோதனை நிலைய வேளாண்மை அலுவலர் பெ.கவிதா கேட்டுக் கொள்கிறார்.



# கிராமப்புற பங்கேற்பு மதிப்பீடு (PRA) மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், ஜன.22

நாமக்கல் மாவட்டம், எலச்சிப்பாளையம் வட்டாரத்தில் பிஜிபி வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் தங்கள் இறுதியாண்டு பாடத்திட்டத்திற்காக கிராமப்புற அனுபவ பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் அகரம் கிராமத்தில் கிராமப்புற பங்கேற்பு மதிப்பீடு (PRA) மூலம் மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்நிகழ்வில் தேட்டக்கலை உதவி இயக்குநர் கு.வித்தாவின் முன்னிலையில் கிராம மக்களின் நேரடி பங்கேற்புடன் அவர்களின் வேளாண்மை சார்ந்த தேவைகள், வளங்கள் மற்றும் முக்கிய பிரச்சினைகளை அறிந்து அதற்கான தீர்வுகளை கண்டறியும் நோக்கில் இந்த செயல்முறை மேற்கொள்ளப்பட்டது. நிகழ்வின் போது கிராம மக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு, தங்களது அனுபவங்கள் மற்றும் கருத்துகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

நிகழ்வின் ஒரு பகுதியாக பிரச்சனை மரம், முழு கிராமத்தின் வள மற்றும் சமூக வரைபடம், வட்ட வரைபடங்கள், பருவ கால நாட்காட்டி, பயண வரைபடம், தினசரி கால அட்டவணை, மக்கள்தொகை விகிதம் மற்றும் செவ்வ வரைபடம் ஆகியவை கிராம மக்கள் முன் விளக்கப்பட்டன. இதன் மூலம் அகரம் கிராம மக்கள் தங்களின் தேவைகள், பிரச்சினைகள் மற்றும் எதிர்காலத்தில் பயன்படுத்த வேண்டிய பல்வேறு தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளும் வகையில் விழிப்புணர்வு பெற்றனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kanniaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# கரும்பு கழிவை உரமாக மாற்றுதல் [Sugarcane Trash Composting]

**1. அறிமுகம்**

கரும்பு ஒரு முக்கிய வர்த்தகப் பயிராக தமிழ்நாட்டில் அதிகளவில் பயிரிடப்படுகிறது. கரும்பு அறுவடைக்குப் பிறகு வயலில் அதிகளவில் உலர் இலைகள் மற்றும் குச்சிகள் மீதமிருக்கும். இதையே கரும்பு கழிவுகள் (Sugarcane Trash) என்று அழைக்கிறோம். பல இடங்களில் இந்த கழிவுகள் எரிக்கப்படுகிறது. இதனால் காற்று மாசு, மண் வள இழப்பு போன்ற பிரச்சனைகள் ஏற்படுகின்றன. இதற்கு சிறந்த மாற்று முறையாக கரும்பு கழிவை உரமாக்குதல் உள்ளது.

**2. கரும்பு கழிவுகள் என்றால் என்ன?**

கரும்பு அறுவடையின் போது கரும்பின் உலர் இலைகள், மேல் பகுதி குச்சிகள், வெட்டப்பட்ட தண்டுப் பகுதிகள் ஆகியவை மீதமிருக்கும். இவை உயிர்சத்து நிறைந்தவையாக இருந்தாலும் நேரடியாக மண்ணில் கரைய அதிக காலம் எடுக்கும். அதனால் இதை உரமாக மாற்றுவது அவசியமாகிறது.

**3. கரும்பின் கழிவுகளை எரிப்பதால் ஏற்படும் தீமைகள்**

காற்று மாசு அதிகரிக்கும். மண்ணில் உள்ள பயனுள்ள நுண்ணுயிர்கள் அழியும். மண் ஈரப்பதம் குறையும். சுற்றுச்சூழல் பாதிப்பு ஏற்படும். அரசு விதிமுறைகளுக்கு எதிரானது.

**4. கரும்பு கழிவை உரமாக மாற்றுதல் (Sugarcane Trash composting) என்றால் என்ன?**

கரும்பு கழிவுகளை நுண்ணுயிர்களின் உதவியுடன் சீராக அழுக வைத்து, ஊட்டச்சத்து நிறைந்த இயற்கை உரமாக மாற்றும் முறை யாகும். இந்த உரமாக்குதல் மண்ணின் உடல் தன்மை, இரசாயன தன்மை மற்றும் உயிரியல் தன்மையை மேம்படுத்துகிறது.

**5. உரம் செய்ய தேவையான பொருட்கள்**

- கழிவுகள் (நறுக்கப்பட்டவை)
- மாட்டு சாணம் / மாட்டு சிறுநீர்
- பசுந்தாள் உரங்கள் (சுபாபுல், கிளிரிசிடியா போன்றவை)
- யூரியா (சிறிய அளவில்)
- நுண்ணுயிர் கலவை (Trichoderma, Pseudomonas, Decomposer)
- தண்ணீர்

### 6. செய்முறை

- முதலில் கரும்பு தோகையை மற்றும் மற்ற கழிவுகளை 5–10 செ.மீ நீளமாக நறுக்க வேண்டும்.
- நிழல் உள்ள இடத்தில் தரையில் அல்லது குழி முறையில் கம்போஸ்ட் அமைக்க வேண்டும்.
- அடியில் ஒரு அடுக்கு கழிவுகளை போட வேண்டும்.
- அதன் மேல் மாட்டு சாணம் கலந்த நீர் அல்லது பசுந்தாள் உரம் போட வேண்டும்.
- இது போல் அடுக்கு அடுக்காக அமைக்க வேண்டும்.
- ஒவ்வொரு அடுக்கிலும் நுண்ணுயிர் கலவை தெளிக்க வேண்டும்.
- 50–60% ஈரப்பதம் இருக்குமாறு தண்ணீர் தெளிக்க வேண்டும்.
- 20–25 நாட்களுக்கு ஒருமுறை உரத்தை புரட்டி விட வேண்டும்.
- 60–90 நாட்களில் நன்றாக கரைந்த உரம் தயாராகும்.

### 7. பயன்கள்

- மண் வளம் மற்றும் மண் அமைப்பு மேம்படும்.
- நீர் பிடிப்பு திறன் அதிகரிக்கும்.
- பயனுள்ள நுண்ணுயிர்கள் அதிகரிக்கும்.
- பயிர் வளர்ச்சி மற்றும் விளைச்சல் உயரும்.
- இரசாயன உரங்களின் தேவை குறையும்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு உறுதி செய்யப்படும்.

மேலும் விவரங்களுக்கு **வீ.அன்னலட்சுமி, இளங்கலை வேளாண் மாணவி மற்றும் முனைவர் ய.குணா, இணைப் பேராசிரியர், வேளாண் விரிவாக்க துறை, சு.சந்தியா மற்றும் ஆ.ல.நிவேதா, உதவி பேராசிரியர்கள் மற்றும் குழு மேற்பார்வையாளர்கள், நாளந்தா வேளாண்மை கல்லூரி, எம்.ஆர்.பாளையம், திருச்சி. மின்னஞ்சல் : baluguna 8789@gmail.com, தொலைபேசி எண்: 99446 41459** **ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்

